செ.வெ.எண் 577 நாள்.09.07.2010.

## வரைவு பத்திரிகை செய்தி

## அரசு கல்வி உதவித்தொகை பெற வங்கி கணக்கு துவங்க முன்வைப்பு தொகை இனி தேவையில்லை சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் தகவல்

தமிழ்நாட்டில் சிறுபான்மையினராக கருதப்படும் கிருத்துவ / இசுலாமிய / பௌத்த / சீக்கீய மற்றும் பாரசீகிய ஆகிய மதங்களைச் சார்ந்த அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு பள்ளி, பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை நடப்பாண்டிற்கு (2010–11) வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கல்வி உதவித்தொகைகள் (புதியவை மற்றும் புதுப்பித்தல்) பெறுவதற்கு முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் (முதலாம் வகுப்பு நீங்கலாக) பெற்றிருத்தல் வேண்டும். இக்கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்பு கணக்கு இருத்தல் விரும்பத்தக்கது. புதிய கல்வி உதவித்தொகை பெற்றவர்கள் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை மட்டுமே கேட்டு விண்ணப்பிக்கவேண்டும்.

### பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயில்பவராக இருத்தல் வேண்டும். பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். கல்வி உதவித்தொகை வேண்டி பூர்த்தி செய்யப்பட்ட புதிய விண்ணப்பங்களை (Fresh), 15.07.2010க்குள்ளும், புதிப்பித்தல் (Renewal) விண்ணப்பங்களை உடனே கல்வி நிலையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

### பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

11, 12ஆம் வகுப்புகள்(வாழ்க்கை தொழிற்கல்வி உட்பட), ஐடிஐ, ஐடிசி, பாலிடெக்னிக், டிப்ளோமா இன் நர்சிங், ஆசிரியர் பயிற்சி, இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு (MBA, MCA நீங்கலாக) பயில்பவராக இருத்தல் வேண்டும். பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகை வேண்டி பூர்த்தி செய்யப்பட்ட புதுப்பித்தல் விண்ணப்பங்களை (Renewal) 15.07.2010க்குள்ளும், புதிய விண்ணப்பங்களை (Fresh) 31.07.2010 க்குள்ளாகவும் கல்வி நிலையங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

<u>வங்கி கணக்கு அவசியம்</u>

18 வயது பூர்த்தியடையாத மாணவ–மாணவியர்கள் அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் பெயருடன் கூட்டுக்கணக்காக (Joint Account) தேசீய மயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருத்தல் வேண்டும். அவ்விவரங்களை விண்ணப்பப்படிவத்தில் தவறாது குறிப்பிடப்படவேண்டும். இது " No frill Account " என்பதால் முன்வைப்புத் தொகை ஏதும் வங்கியில் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது என்று 29.6.2010 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான வங்கியாளர் குழு (SLBC) கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009–10ஆம் ஆண்டிற்கு பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைகள் ஒப்பளிக்கப்பட்ட மாணவ–மாணவியர்களின் பட்டியல்கள், எளிமையாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் கேட்புப்பட்டியல் படிவங்கள் www.tn.gov.in/bcmbcmw/welfschemes_minorities/htm என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன. சிறுபான்மையின மாணவ–மாணவியர்கள் 2010–11ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை வேண்டி உரிய விண்ணப்பத்தில் பயிலுகின்ற கல்வி நிலையங்களிலேயே விண்ணப்பிக்கலாம்.

கல்வி நிலையங்கள், மாணவ–மாணவியர்களிடமிருந்து பெற்ற கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களைச் சரிபார்த்து உரிய படிவத்தில் புதுப்பித்தல் (Renewal) கேட்பு பட்டியலை 31.07.2010க்குள்ளும் மற்றும் புதியதற்கான (Fresh) கேட்பு பட்டியலை 10.08.2010க்குள்ளும் குறுந்தகட்டில் (Arial Font, size 12 Point) பதிந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு www.minorityaffairs.gov.in என்ற இணையதள முகவரியிலும் அறியலாம்.

சிறுபான்மையின மாணவ–மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒம்/- பெ. மதிவாணன்.
சிறுபான்மையினர் நல ஆணையர்

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.